பதிவு எண் —M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—4 குருகுலம், மாம்பாக்கம்; நந்தன, ஆனி; 27—6—52. தளா—58

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

அறத்தின் ஆற்றல்

மக்கள் வாழ்க்கையில், பிணி, பசி, மூப்பு முதலான பலவகை இடையூறுகள் குறுக்கிட்டு அரும் பெறல் வாழ் நாட்களைச் சூறையாடுகின்றன. ஒவ்வொருவரும் நல்ல செயல்களைச் செவ்விதின் ஆராய்ந்து, காலத்தை ஒரு சிறிதும் வீண் போக்காமல் செய்து வருவாராயின், வாழ் நாண் மாலையில் 'ஆ! இத்துணை நாட்களும் அறம் ஏதும் தக்கபடி புரிதலின்றிக் கொன்னே கழிந்தனவே! இழந்த நாட்களை எங்ஙனம் பெறவல்லேம்! இக் குறுகிய நாட்களில் நல்லனவாக என்ன செய்யக் கூடும்!' என்று கழிபெருந் துன்பம் அடையப் பெறார்கள். அதற்குப் பதிலாக இறுதி நாள் குறுகக் குறுக உள்ளத்தில் உலப்பிலா மகிழ்ச்சியும், அமைதியும், 'செயத் தக்கன குறைவின்றிச் செய்து முடித்தேம்' என்னும் ஏமாப்பும் அடைவார்கள்.

உள்ளத்தில் குறை ஏதும் இன்றி மகிழ்ச்சியோடு வாழ்நாண் முடிவினை அடைவார்க்கு மறுபடி பிறவியாகிய துன்பம் கிடையாது. அம் மகிழ்ச்சிக்கு ஏதுவான நல்லறத்தினைக் காலமறிந்து, பொழுதினை வீணாகக் கழிக்காமலும், பயன் கருதாமலும் ஒருவன் செய்து வருவானாயின் அவ் வறப் பயனே, அவன் அடுத்தபடி பிறவி யெய்தித் துன்புறாதபடி காத்தளிக்கும் என்று, அறத்தின் பேராற்றலை விளக்குதற்காக அதனை, 'வாழ்நாள்' வழியடைக்கும் 'கல்' என்று சிறப்பிக்கப் பட்டது.

ஆகவே இத்துணைப் பேராற்றல் வாய்ந்த அறத்தினை இடையீடின்றி ஒவ்வொருவரும் செய்து வருதல், இம்மையில் இன்பமும் மறுமையில் வீடும் பெறுதற் குரிய வழி என்று உணர்த்தப் பட்டது.

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃ தொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்

வீழ் நாள் படாமை நன்று ஆற்றின் — செய்யாது கழியும் நாள் உளவாகாமல் ஒருவன் அறத்தைச் செய்து வருவானாயின்; அஃது ஒருவன் வாழ்நாள் வழியடைக்கும் கல் — அச் செயல் அவன் யாக்கையோடு கூடு நாள் வரும் வழியை வாராமல் அடைக்கும் கல்லாம்.

நல்லன புரியாது கழிந்தநாட்களை எத்துணை யளவு தவம் செயினும் மீண்டும் பெறப்படுமாறில்லையே என்று இரங்குவார் 'வீழ் நாள்' கூறினார்.

அவிச்சை, அகங்காரம் அவா விழைவு வெறுப்பாகிய குற்றங்கள் காரணமாக இருவகை வினையும், உள்ளதுணையும் உயிர் பிறவி எய்தி எய்தி அவ்வினைகளின் பயனை நுகரும் ஆதலால் அந்நாள் முழுவதும் 'வாழ் நாள்' எனப்பட்டது. இத் திருக்குறள் அறம், வீடு பயக்கும் என்பதனை விளக்குகின்றது.

வாழ்நாண் முழுவதும் யாதானும் பயன் படும் செயல்களை ஒழிவின்றிச் செய்து வருக என்று இதனால் வற்புறுத்தினார்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

4-ம் ஆண்டுக் கையொப்பம்

(5-10-51 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள் — கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம் **P. O.**

(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	நந்தன, ஆனி,	தளிர்
4	27-6-52 வெள்ளி	39

வழிபாடு

மக்கள் வரலாற்றைக் கூர்ந்து கவனிப்பார்க்கு அவர்கள் வாழ்வின் பழமையும், இடைக்கால மாட்சியும் நிகழ்காலக் காட்சியும் நன்கு விளங்கும். ஒரு காலத்தில் மக்கள் நாகரிகம் என்ற பொருள் அறியாராகி ஒருவரை ஒருவர் அடித்துத் தின்று காட்டு மனிதராகிக் காலம் கழித்தமையை வரலாறு கூறுகின்றது. ஆயிரக் கணக்கான ஆண்டுகள் சென்ற பின், மக்களின் பகுத்தறிவு வளர்ச்சி யடைந்தபின் தம்மையும் தம் சூழ்நிலையையும் அமைத்துக் காக்க வல்ல ஒரு பரம்பொருள் உண்டென்ற ஒரெண்ணம் மக்கள் உள்ளத்தில் மெதுவாகப் புகுந்து அவ்வெண்ணம் படிப்படியாக மக்கள் சென்ற காடு முருடான தீ நெறிகளைத் தடுத்து நல்வழிகளிற் செலுத்தியது. ஏனைய உயிரைக் காட்டிலும் தாம் சிறந்துள்ளமையை மக்கள் உணரத் தலைப்பட்டனர். நாகரிகம் வளர்ந்தது.

உலகில் ஒவ்வொரு நாட்டுக்கும் இவ்வரலாறு பொருந்தும் என்றாலும் நாகரிகத்தில் பழம் பெருமை வாய்ந்த நம் நாட்டினை இஃது சிறப்பாகக் குறிப்பதாகும். நம் நாடு தொன்று தொட்டே தெய்வ வுணர்ச்சியிலும் நம்பிக்கையிலும் தலைசிறந்தது. தொல்காப்பிய காலம் முதல் இந்நாள் வரையில் மக்கள் எத்தனையோ நெறிகளில் இக்கடவுட் கொள்கையை வளர்த்து வருகிறார்கள்.

மக்கள் உள்ளம் என்றும் தென்றல் தவழும் அமைதிப் பூங்காவன்று. அரசியல், இல்வாழ்க்கை, இன்ப துன்பங்கள், விழைவு வெறுப்புக்கள், பகையின்னல்கள் இன்னபிற சூறைக்காற்றுகள் ஓய்வின்றி உள்ளத்தில் இடம் பற்றுகின்றன. உள்ளத்தில் இன்று காணும் மகிழ்ச்சி அடுத்தபடி மறைந்து இன்னல் சூழ்ந்த பெரும் பாலையாகிறது. வறட்சி மிகுகின்றது.

இந்நிலையில் மனத்திற்கு அமைதியும் மகிழ்வும் நம்பிக்கையும் அளிக்கத் தக்கது கடவுள் வழிபாடு. மனப் புயலடலங்கச் சிறிது நேரம் நல்லடியார் பாடல்களைக் கருத்துணர்ந்து பாடினால் போதும்; துன்பம் பறந்தோடுகின்றது. இன்பம் மிகுகின்றது. அதுமட்டுமன்று; உள்ளம் பொருந்தா விழைவு நெறிகளில் புக ஆசைப் படும்போதும் இவ்வழிபாட்டுணர்ச்சி தடுத்துக் காக்கின்றது.

சங்க காலத்தில் பரிபாடல், முருகாற்றுப் படை போன்ற பாடல்களில் தெய்வப் பண்புகள் குறிப்பிட்டிருப்பது உண்மை எனினும், இடைப்பட்ட காலத்தில் சமய குரவர் ஆழ்வார்கள் பாடல்களிற் காணுவது போல கடவுளோடு நம்மை ஈர்த்துச் சென்று சேர்க்கும் பண்பு அவைகளில் அவ்வளவாகக் காணவில்லை.

'சமயப்' என்ற வேறுபாடு நீங்கிப் பக்தி என்ற உளப்பான்மையில் அப் பாடல்களை ஓதுவார்க்குக்கிடைக்கும் நன்மைகள் அளப்பரியன.

பொதுவாக, வழிபாட்டுணர்ச்சி உலகில் யாண்டும் நிறைந்தால் போரும் புரட்சியும் மாறுபாடுகளும் பறந்தோடும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய வழிபாட்டுக் கூட்டங்கள் திருக்கழுக்குன்றத்தில் இவ் வானி 14 15 தேதிகளில் நடைபெறுகின்றன. சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் பெரு முயற்சியோடு அக்கூட்டங்களை நடத்துகிறார்கள். பொருளற்ற கட்சி சமயப் பூசல்கள் நிறைந்த இந்நாட்களில் இஃதொரு சிறந்த மாட்சியுடைய செயல் என்று அறிஞர் சொல்லத் தவற மாட்டார்கள்.

சி. து. க.

முதலாளிக்கா? தொழிலாளிக்கா?

'நலங்கிள்ளி'

வேலை செய்யும் தொழில் நேர நீடிப்புத்தான் (Surplus Value) உபரி மதிப்பைத் தருகிறது. அதுவே முதலாளிக்கு லாபமாகிறது. அந்த லாபத்தின் சேர்க்கையே மூலதனத்தின் அஸ்திவாரம் என்பதை முன் கட்டுரையில் நோக்கினோம்.

மேற் கூறியவை தொழிலாளிக்கு மட்டுமல்ல; உழவனுக்குங் கூடத்தான் நேர்வது. உழவனும் தன் நிலச் சுவான்தாரிடம் பணி செய்கிறான்; வாரம் கொடுக்கிறான்; உழைப்பது முழுவதும் அவன்; அனுபவிப்பது நிலச் சொந்தக்காரன்.

தொழில் உலகத்தில் முதலாளி, பொறிகள், மூலப் பொருள்கள் முதலியன வாங்குகிறான். தொழிலாளியால் மூலப் பொருள்கள் பண்டங்களாக மாற்றம் எய்துகின்றன; விற்பனைக்கு அனுப்பப் படுகின்றன.

விவசாயத்திலோ நிலச்சுவான்தார் நிலத்தை வாங்கி விடுகிறான். உழவன் நிலத்தைப் பண் படுத்தி விதை நெல் வாங்கி நீர் பாய்ச்சி எருவிட்டு விளைவிக்கிறான். தன் உழைப்புக்குக் குறைந்த ஊதியத்தை வாரமெனப் பெற்றுச் செல்கிறான் உழவன். நிலச் சுவான்தாரோ தான் வாரமெனப் பெற்ற நெல்லை விற்பனைக்கு அனுப்பி வைக்கிறான்.

இரண்டிடங்களிலும் உழைப்பின் பயன்தான் விற்பனை செய்யப் படுகிறது. ஆனால் அந்த விற்பனை செய்யப்பட்ட பொருள் மட்டும் உழைப்பின் சொந்தக் காரனுக்குச் சென்று எய்துவதில்லை. மாறாக மூலப் பொருள்கள், பொறிகள், நிலம், இவைகளைச் சொந்தமாக உடைய முதலாளிக்குச் செல்கின்றது. முதலாளியோ தொழிலாளிக்குக் கூலி என்னும் பெயரால், தான் உற்பத்தி செய்து கொண்ட பொருளில் மதிப்புக்குக் குறைவாகக் கொடுத்து மற்றவைகளைத் தனக்கென எடுத்துக் கொள்கிறான். இதை அபகரித்தல் என்பது மிகப் பொருத்தமாக இருக்கும்.

இனி உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் அமிதமாகப் பெருகி விடுங் காலத்தில் அதன் இன்றியமையாமை குறைவெய்தும். தேவை குறைந்தால் உடனே அதன் மதிப்பும் குறைந்து விட வேண்டியதே. அப்படிப்பட்ட காலத்திலே முதலாளிக்கு எந்த விதமான நஷ்டம் ஏற்படாதாயினும் தன்னிடமிருந்து விற்பனைக்குச் செல்லும் எந்த ஒரு பொருளின் விலையும் எக்காரணத்தைக் கொண்டும் மதிப்பிழக்கக் கூடாது என்பதே முதலாளியின் குறிக்கோள் ஆகையினால், அவன் கீழ்க் காணும் முறைகளில் ஏதேனும் ஒன்றையோ பலவற்றையோ கைக் கொள்ளுகிறான்.

(1) அந்தப் பண்டங்களை அதிகப்படியாக உற்பத்தி ஆனதினால்) தேக்கி வைத்துக் கொள்ளலாம்.

(2) அவைகளை அழித்துவிட்டு அமித உற்பத்தியைத் தடுத்து விலையை அதே நிலையில் வைத்துக் கொள்ளலாம்.

(3) வேலைக்காரர்களை வேலையில் இருந்து நீக்கி மேற்கொண்டு உற்பத்தி ஆகாமல் தடுக்கலாம்.

(4) ஆட்களுக்குச் சம்பளத்தைக் குறைத்து, அதன் மூலமாகத் தன்னுடைய லாபம் சிறிதும் வீணாகாமல் பார்த்துக் கொள்ளலாம். (வரும்)

உ

கழுக்குன்றம்

மண்ணில் அருளாட்சி மல்கும் அடியருளக்
கண்ணில் திகழும் கழுக்குன்றே—என்னும்
மறையாக மத்தான் மலையாள் இடத்தான்
கறையார்க ளத்தான் களம்

நற்பதத்தார் ஞானத்தின் நல்லுருவாய்க் காவியமும்
கற்பனையும் எட்டாக் கழுக்குன்றே—அற்புளத்தின்
எந்தாய்! இறைவா! இரங்கிடாய் என்பாரை
வந்தாதரிப்பான் வரை

பின்னும் புதிதாகிப் பேசும் சிறப்பெல்லாம்
மன்னும் எழிலார் மறைமலையே—சென்னைச்
சிவனடியார் சீர்த்தி செழித்துலவ ஆண்டான்
அவன்என்றும் தங்கும் அகம்.

சி.து.க.

* நிலவுக்கு - - - - *

4

[சந்திப்பு]

குளிர்தரு நிலவே,

நினைத்தாலும் நெஞ்சம் துடிக்கிறது. உடல் நடுங்குகிறது. உள்ளம் "விம்மிதம்" அடைகிறது.

அன்று ஏமாற்றம் அடைந்ததற்கு இரண்டாம் நாள் காலை தாத்தா கலாசாலைக்குச் சென்றுவிட்டார்.

எனக்கு இசையின்பத்திலே சிறிது பசை உண்டென்பது உனக்கு நன்கு தெரியும்.

அதுவும் "சிலப்பதிகாரத்தையும்" "கலித்தொகையை" யும் நான் இசைபோட்டுப் பாடும்போது தாத்தா தன்னையறியாமல் உட்கார்ந்து விடுவார்.

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்" என்றெல்லாம் வாயளவிற்காகிலும் பிரசாரம் நடந்து வருவதும் இக்காலந்தான். தொழிற் கல்வி கற்க விரும்புபவர்க்கு ஊக்கம், பணம், வசதி இவை ஒருங்கே அமையாதிருப்பதும் தற்காலந்தான். வழிவழியாகத் தொழிலாளியாக வாழ்ந்து வருபவர்கள், தாழ்வு மனப்பான்மையோடு அவர்கள் உணர்ச்சி, தளர்ச்சியடையும் வகையில் நடத்தப் படுவதும் தற்காலந்தான்.

இதையெல்லாம் எதற்காகக் கூறுகின்றேன் என்றால், நான் நேரத்தை வீண் போக்குவது கிடையாது. உணவு சமைத்துத் தாத்தாவுக்குப் படைத்து நானும் உண்ட பிறகு சோம்பேறியாகவா உட்கார்ந்திருப்பது? தூங்கியா காலங்கழிப்பது? இவை எனக்குப் பிடிக்காதவைகளாயிற்றே! ஏதாவது படிப்பேன் எண்ணுவேன்; எழுதுவேன். நூலைக் கொண்டு உடைகள் தைப்பேன். வகை வகையான வண்ணப் பூக்களை நூலினால் ஊசி கொண்டு பின்னி சன்னல் முதலியவற்றிற்குத் திரைகள் அமைப்பேன்.

தலைவர்களின் பேச்சு! அவர்களே அவர்களின் பேச்சுப்படி நடக்கமுடியாமல் திண்டாடும் நிலைமை. நாட்டிலே பலவிடங்களில் பஞ்சம் தலைவிரித்தாடுவதற்குக் காரணங்கள் - வகுப்பு நெறி எங்கெங்குக் காணுகிறது? எதனால் உண்டாகிறது? யார் யார் அவற்றிற்குத் தூண்டுகோலாய் அமைந்திருப்பது; —என்பவை, வல்லரசுகளின் குணங்கள்— அவை ஒன்றோடொன்று வேறுபட்டு விளங்குவதற்கான சூழ்நிலைகள் — இன்னும் இவை போன்ற செய்திகளைத் தாங்கி வரும் தாள்களைத் தவறாமல் படிப்பேன்.

ஏதோ சொல்ல வந்தவள் வேறு ஏதோ கூறிக் கொண்டு போகிறேனே!

பலநாள் பாடுபட்ட தன் பயனை அன்றுதான் அனுபவிக்கின்றான் பாட்டாளி; "உலகம் ஏர்முனையிலே" என்ற எடுத்துக்காட்டுக்கு ஏற்ப நடந்து, உழவன் இன்பம் காணும் நாள். அது தான் பொங்கல் திருநாள்.

பரந்த வெளியிலே வெட்டப்பட்ட அடுப்பு; பானைகள் மூன்று அதன் மேல் இருக்கும் காட்சி; பக்கத்திலே சிறிது செந்நெல் கதிர்களும், கரும்பும் வைத்திருக்கும் தன்மை; பானைகளிலே பாலும் உணவும் பொங்கும் நிலைமை, கரும்பைக் கடித்துச் சுவைத்துக் கொண்டிருக்கும் பாலகன், இவைகளைப் பார்த்துப் பாட்டாளியும் அவன் மனைவியும் மனமகிழ்ச்சியோடு நின்றிருக்கும் காட்சி — இக்காட்சியைத்தான் அன்று சன்னலுக்கென்று பின்னி முடித்த திரையில் அமைத்திருந்தேன்.

கருதிய காட்சியை என் கைகள் செயலாற்றி முடித்ததைக் காணும்போது மனதிலே மகிழ்ச்சியுண்டாகாமலா போகும்?

மகிழ்ச்சிப் பெருக்கு என் மனத்திடத்தே நிகழ்ந்தது. பல நாள் வறுமையில் வாடும் வறியவன், பொன்னாபரணம் புதையலாகக் கண்டெடுத்தால் அடையும் ஆனந்தம் போன்று மகிழ்ச்சியடைந்தேன். மனதிலே இன்பத்தின் அலைகள் துள்ளி விளையாட என் வாய் என்னையறியாமல் இசைக்கத் தொடங்கிவிட்டது.

'பூவர் சோலை மயிலாலப்
புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய
நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை அருகசைய
நடந்த வெல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறம் கண்டே
அறிந்தேன் வாழி காவேரி'

என்ற வரிகளை என் வாய் அழகுப் பண்ணிலே இசைக்கத் தொடங்கி விட்டது. நான் அமைத்த ஓவியத்தைப் பார்த்துக் கொண்டே பாடினேன்.

"அழகாய் அமைந்திருக்கிறது" என்ற குரல் திடீரென்று என் பின்னாலிருந்து வந்தது. உடல் பதறியது; நடுங்கியது.

பெண் குரலாயிருந்தால் யாரோ என் தோழிகளுள் ஒருத்தி வந்திருக்கிறாள் என்று மனவமைதி பெற்றிருப்பேன். பேசியது ஆண் குரலைப் போன்றிருந்தது. அதுவும் குழைவுடன் அமைந்திருந்தது. இருந்தும் என்ன? பேசியது ஒரு ஆண் தான் என்பது நிச்சயமாகத் தெரிந்து பயந்தே போய் விட்டேன்.

தாத்தாவிடம் தவிர வேறு ஆண்களிடம் அதிகம் பழகியறியாதவள் நான். சாவை நோக்கிச் செல்பவளைப் போன்று என் மனத்திடத்தே "வேதனை" நிரம்பிவிட்டது. திரும்பிப் பார்ப்பதற்கும் பயமாய் இருந்தது. ஐந்து நிமிடங்கள் அப்படியே சென்றிருக்கும் என நினைக்கிறேன்.

"புலியைப் பார்த்து நடுங்கும் மானைப் போல; கசாப்புக் கடைக்காரனைக் கண்டு நடுங்கும் ஆட்டைப் போல; பூனையைக் கண்டு நடுங்கும் கிளியைப் போல என்னைப் பார்த்து — இல்லை — என் குரலைக் கேட்டு நடுங்குவதற்குக் காரணம்?"

என்ற குரல் தொடர்ந்து ஒலித்தது. "பேசுந்தன்மை" — வந்திருப்பது ஒரு அறிவாளி என்பதை அறிவுறுத்தியது, ஆனால் யார் என்றுதான் விளங்கவில்லை. இந்த ஆண் பிள்ளைகளே சற்றுத் துடுக்குத்தனம் கொண்டவர்கள் என்று என் நெஞ்சு சொல்லிற்று. இருந்தும், திரும்பிப் பார்ப்பதற்கு அச்சமாகவே இருந்தது.

"வந்தவனை வா வென்றழைக்கவில்லை, முகத்தானமர்ந்து இனிது நோக்கி வரும் விருந்தினமை விருப்போடு வரவேற்பது தான் மனித குணத்தின் தன்மை என்று படித்திருக்கிறேன். அதற்கு நேர் மாறாகத்தான் இங்குக் காண்கின்றேன். என்னைச் சிறு வயதில் ஆட்டமும் ஓட்டமும் பல காட்டி குறு குறு நடந்து சிறுகை நீட்டி விளையாட்டுக்காகினும் என் தலையில் குட்டி, நான் திரும்பிப் பார்ப்பதற்குள் ஓடி ஒளிந்து இன்பமொழிகளால் என்னை ஏளனம் செய்து இருந்த இளநகை இப்போது இப்படி மாறிவிடுவாள் என்று கனவிலும் நான் கருதவில்லை."

என்ன! வந்திருக்கும் மனிதன் என் பெயரை அறிந்திருக்கின்றானே! பல நாள் பழகியவனைப் போல் பேசுகின்றானே! அச்சமும், நாணமும் என்னைப் பற்றிக் கொண்டன.

"பெண்கள் வண்ணப் பூக்கள். மென்மை மலர்கள்—என்றெல்லாம் நினைத்திருந்தேன். அன்பும் இனிமையும் அவர்களுடன் பிறந்தவை என்றுந்தான் நினைத்திருந்தேன். அந்த எண்ணம் இன்று........ ....உம்" என்று தொடர்ந்து கேட்டது அக்குரல்.

எனக்கு ஆத்திரம் தான் அதிகமாக வந்தது. பருவப் பெண்ணொருத்தி தனியே இருக்கிறாள். அந்த வீட்டிலே ஆண் துணை அப்போது யாருமில்லை. வேலைக்காரியும் அப்போது தன் வீட்டிற்குச் சென்றிருக்கிறாள். இந்த நிலையில் வரும் வேற்று ஆள், வீட்டிலிருக்கும் நிலையை அறிந்தும் கூட வீம்புடன் வீணாக வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. வந்த மனிதன் என்னைப் பற்றி ஏளனமாக வார்த்தைகளைக் கூறுவது — வெந்த புண்ணிலே வேல் நுழைவதைப் போல — ஆத்திரத்தை அதிகப்படுத்தியது.

தாத்தாவைத் தேடி வந்தவருக்குத் தகுந்த பதிலைக் கூறாமல் — பேசாமல் இருந்தது நியாயமா? என்று நீ கேட்கலாம்.

அப்படி வருகிறவர் வாயிற் படியிலிருந்து கொண்டே, தாம் தேடி வந்தவர் உள்ளே இருக்கிறாரா? என்று குரல் கொடுக்க வேண்டும். அப்போது நான் தக்க பதில் கூறியிருப்பேன். அதுதான் முறையும் கூட.

அப்படியா நடந்தது? நான் இன்பமாகப் பாடிக்கொண்டிருந்தபோது பின்னால் வந்து மிகவும் பழகியவரைப் போன்று பேசினால் என்னால் எப்படி உடனே பதில் கூறமுடியும்? எப்படி பயப்படாமல் இருக்க

நஞ்சன் கூடுபல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1

முடியும்?— என் உடம்பு நடுங்காது—? இதை என் வந்தவர் உணர முடியவில்லை?

"அண்ணா! நீ என் வீணாகப் பேசிக் கொண்டிருக்கிறாய். அவளுக்குச் செவிகள் செவிடாய் விட்டனவோ என்னவோ? நான் காதருகில் சென்று ஓசை செய்து அழைத்துப் பார்க்கிறேன்!"

இது என்ன மற்றொரு புதுக் குரல். பெண் குரல். அலைகடலாகியது என் மனம்.

இருப்பதை இல்லையென்று கூறினால் கோபம் உண்டாகும். இப்போது இவள், இல்லாத ஒன்றை இருப்பது போன்று பொய் கூறுகிறாளே. ஏன் எனக்குக் கோபம் உண்டாகாது!

'யார் செவிடு? யார் கல் மனமுடையவர்? யாருக்கு விருந்தினர்களை வரவேற்கத் தெரியாது? வீணான சொற்களைச் சொல்வது யார்? 'பண்பு' யாரிடத்திலிருந்து போய் விட்டது? என்ற கேள்விகளையெல்லாம் வந்திருப்பவர்களிடம் கேட்டுவிட வேண்டும் என்று என் மனம் துடித்தது.

திரும்பிப் பார்க்க எண்ணம் கொண்டேன். இதற்குள் இரண்டு கைகள் என் இரண்டு தோள்கள் மீதும் பட்டன போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

திரும்பினேன் 'தேன்மொழி' நின்றிருந்தாள். வியப்பு எய்தினேன். அவள் சிரித்துக் கொண்டிருந்தாள்.

தேன் மொழி! நீமட்டுந்தான் தனியாக வந்தாயா? துணைக்கு யாரும் வரவில்லையா? வீட்டிலுள்ளவர்கள் நலமாக இருக்கிறார்களா? என்ற கேள்விகள் என் வாயிலிருந்து வந்தன. என் கண்கள் அங்குமிங்கும் சுற்றுப்புறமெல்லாம் நோக்கின. முதல் பேசியது ஆண் குரல்; தேன் மொழி, அண்ணா என்றழைத்துப் பேசியதிலிருந்து 'வேனில்' தான் வந்திருக்கிறார் என்பது நன்றாகத் தெரிந்தது ஆனால் அப்போது அவர் எங்கே என்று அறிய என் மனம் எண்ணம் கொண்டது.

'இள நகை! உணவுக்குப் பஞ்சம், உடைக்குப் பஞ்சம் என்றெல்லாம் கேள்விப் பட்டிருக்கிறேன். உன் வாய்ப் பேச்சுக்குப் பஞ்சம் ஏற்பட்டதின் காரணத்தை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. என்றாள்.

என்னைப் பற்றி அவள் குறை கூற, அதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய நேரமா அது? அன்று ஆடம்பரம் பல செய்து கொண்டேனே—அது யாருக்காக? இரட்டைப் பின்னலும், பட்டுப்புடவையும் கட்டிக் கொண்டேனே — யாரை வரவேற்பதற்கு? அறு சுவையுணவு செய்து வைத்திருந்தேனே—எவரைக் கருதி?

அன்று அவர் வரவில்லை. இன்று வந்தார். நான் வந்தவரை வரவேற்கவில்லை என்று தாத்தா அறிந்தால் என் மேல் கோபப் படமாட்டாரா?

நிலவு! நினைத்துப் பார். நான் அப்போதிருந்த நிலை எவ்வளவு இக்கட்டானதென்று நான் தேன் மொழியுடன் பேசவில்லை. மனக் குழப்பத்துடன் இங்கும் அங்கும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

தேன்மொழி சிரித்தாள். நான் அவளைப் பார்த்தேன்.

வெட்டுவதற்குக் கட்டி வைத்திருந்த ஆடு தப்பிச் சென்று விட்டால்—இன்பம் ஆட்டிற்கு; பணம் பறி போயிற்றே என்ற துன்பம் கடைக்காரனுக்கு. உலகத்தின் நிலையும் இம்மாதிரியே தான் அமைந்திருக்கிறது. ஒருவன் இன்பமடையக் காரணமாயிருப்பதே மற்றொருவனுக்குத் துன்பம் விளைவிக்கக் காரணமாயமைந்து விடுகிறது.

அவள் சிரித்தாள். நான் மனம் கலங்கினேன். "இள நகை! நீ பேசாமல் இருப்பதைப் பார்த்துத்தான், அண்ணா கூடக் கோபித்துக் கொண்டு வீதிக்குச் சென்று விட்டார். நான் உன்னோடு ஒரு வார்த்தை சொல்லிவிட்டுச் சென்றுவிடலாமென்று.........'என்று அவள் மீண்டும் கூறினாள்.

என் நிலை அப்போது எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பார். இருப்பிடத்தை விட்டு எழுந்துவிட்டேன். தேன் மொழியும் தெருவின் பக்கமாகத் திரும்பிச் செல்ல ஆரம்பித்தாள்.

கெஞ்சினால் மிஞ்சுவது. மிஞ்சினால் கெஞ்சுவது என்ற பழமொழி என்வரையில் உண்மையாகி விட்டது.

'தேன்மொழி! யார் வந்திருப்பதென்றே நான் அறியவில்லை. நான வேண்டுமென்றே பேசாமல் இருக்கவில்லை. அன்னியர் எவரோ உள்ளே வந்திருக்கிறார்கள் என நினைத்துக் கொண்டேன். உன் அண்ணாவை உள்ளே வரச் சொல்லேன். எனக்காக அவரைக் கோபம் கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்ளேன். ஒரு தோழிக்காக இது கூடச் செய்யக் கூடாதா?'

என்றெல்லாம் தேன் மொழியின் வழி மறித்து அவளிடம் சொன்னேன். ஏன், கெஞ்சினேன் என்று கூடக் கூறலாம்

(வரும்)

* இலக்கிய ஆசிரியர் *

திரு. J. M. முத்துவீராசாமி நாயுடு, B. A.

இறைவன் கைக் கருவிகளாக இருந்து இலக்கியங்களை ஆக்கித் தரும் ஆசிரியர் அளிமிக உடையராகித் தம்மால் இயன்றவற்றை உலகிற்கு உவந்தளிக்குமாறென்னை? இங்ஙனம் கூறுதல், முன்னொடு பின் மலையக் கூறுதல் என்னும் குற்றத்தின்பாற்படுமே என்று நினைத்தல் இயல்பு. ஆனால், உற்று நோக்கின் அத்தகைய முரண்பாடு இல்லையென்பது புலப்படும். இறைவன் கைக் கருவி என்றது உண்மை ஆயினும், கருவிகளாய் அமைந்தோர் இயல்புகள் முற்றும் அழிந்துபோம் என்றும் கொள்ளுதற்கில்லை. இறைவன் செயலுக்கு அன்னவர் தக்கவாறு அடங்கி அமைந்து நின்று இயற்றுதலையே ‘கருவி’ என்பது குறிக்கும். இனித் தம் இயல்பு முற்றும் மறையப் பெறின், தனித்தன்மை என்ற ஒன்று உள்ளதாம் வழியுமில்லை. இளவேனில் அல்லது கார்ப்பருவ நலத்தைத் நினைத்துத் தம் இயல்பில் மிகும் செயல் கல்லையொத்த உயிரில்லன இவற்றிற்கில்லை. இஃது இங்ஙனமாகவும் உயிருள்ளன தம் இயல்பிற் கேற்பவே பருவச் செவ்வியைத் நினைத்து விளையும் பயனைத் தம் இயல்புகளுக்கு அமையத் தம் உருவங்களிலும் செயல்களிலும் காட்டிடும்: செடிகொடிகள் தளிர்த்தும் பல வண்ணமுள்ள அழகிய நறுமலர்களை எந்தி நிற்கும்; வண்டினங்கள் இசைக்கும்; குயில்கள் பாடும்; மயில்கள் ஆடும்; கிள்ளைகள் இணை இணையாக இருந்து செருக்கிக் கொஞ்சி மகிழும்; மக்களோ தம் வழக்கின் இயற்கை நலம் மேம்பட்ட ஆடை அணி மலர்களைக் கொண்டு ஒப்பனை செய்து கொண்டு பருவ நலனை யளிக்கும் தெய்வத்தை நினைந்து ஏத்தித் திருவிழாக் கொண்டாடித் தம்மால் இயன்றவற்றைப் பிறருக்கு வழங்குவர்.

இப் போக்கை யொட்டியே ஆசிரியன்மாரும் தாம் கண்டு கொண்டு திளைத்து மகிழ்ந்து தம் இயல்பிற் குன்றாது உலகுக்குத் தம் நூல்களை உவந்தளிப்பர். எனவே, கவிகளாய் அமைந்தவர் அளித்தலில் இயலாதவரும் அல்லர்; இயற்கைக்கு மாறுபட்டவரும் அல்லர். அளிக்கும் நிலையிலும் பெரியோர். அவ்வளி இறைவன் செயல் என்பதை உணராதாரும் அல்லர்.

நூல்களைச் செய்தளிப்பதற்கு ஈடாக அன்னவர் கைம்மாறு எதுவும் பெறுவதில்லை. தக்க கைம்மாறு செய்தலும் இயலாது. அன்றியும் கைம்மாறு கருதியும் நூல்களைச் செய்வாருமல்லர். உலகையெல்லாம் ஆக்கிடும் ஆக்கவியல் தம் உள்ளத்தில் அரும்பி நூல்களைச் செய்யும்படி கருத்தை உந்திநிற்கு மாற்றானும், அதை வைத்துக் கருத்து, நூலுருவங்களை ஆக்கிடு மாற்றானும், விளையும் இன்ப வுணர்வுக்கு எல்லையும் உண்டோ! இதனைக்காட்டிலும் சிறந்த ஒன்றை உலகம் எவ்வகையில் அளிக்கக்கூடும். அளிக்கக் கூடுமென நினைத்தலும் அறியாமையின் விளைவேயாகும்.

மக்களிற் பெரும்பாலோர், இலக்கியத்தை விழைதற்குரிய காமஞ்சாலா இளமைப்பருவத்தினரேயாக, அதனைப் போற்றற்கும் அறியாதவராயினர். இலக்கியத்தை ஆக்குவோர்க்குக் கைம்மாறு செய்ய வாய்ப்புமில்லை. ஆகவே, அவர் கைம்மாறு கருதாதவர் என்பது ‘கிட்டாததை விரும்பினாரில்லை’ என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வது போலும்! என்று கருதுதலும் கூடும்.

மக்களிற் பெரும்பாலோர் இலக்கியச் சுவையை அறியாதவர் என்பது உண்மை. ஆனால் இலக்கிய ஆசிரியன்மாரும் தம் நூல்களை வாணிகப் போக்கிலே கருதி உலகிற்களிப்பதும் இல்லை. உலகின் மதிப்பும் அவமதிப்பும் சென்று தீண்டலாகாத உயர்ந்த நிலையில் இருந்தே அன்னவர் நூல்களை அளித்திடுவர். அன்றியும் உலகம் என்பது உயர்ந்தோர் மேலதாகலின், அன்னவர் மதிப்பே உலகத்தின் மதிப்பாகலின், அவரை

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குத்தெரு சென்னை 1.

யொழித்துப் பிறர் அறிந்து போற்றுமை ஒரு குறையாகக் கொள்ளற் பாலதும் அன்று.

இனி, அன்னவர் புகழை விரும்பி நூல்களைச் செய்வார் போலும் என்று கருதுதலும் கூடும். அருள் நிலையில் பொருளையோ அன்றிப் புகழையோ அவர் கருதுவதில்லை விரும்புவதும் இல்லை. அருள் சுற்று ஆறிய நிலையில் கடமையை நினைப்பர். அந் நிலையில் கைக்குவேண்டிய பொருளையும் அன்றிப் புகழையும் விழைதலும் கூடும். அங்ஙனம் கருதி விழையும்போது, அருள் நிலையினின்றும் உலகியல் மக்கள் நிலைக்கு இழிந்து நிற்கும் பரிசினால், அந் நிலையில், அன்னவர் செயல் ஆசிரியர் செயலாகக் கொள்ளுதற்கில்லை. அந் நிலையிலுங்கூட அவற்றைப் பிறமக்களைப் போன்று பெரிதும் விரும்பி நாடார். கடமையைப் பொருட்படுத்தும் அளவுக்கு அவற்றைப் பொருட்படுத்தார்.

பெருவலி படைத்த புயலையொக்கும் கடமை உணர்விற் சிக்குண்ட பொருள் புகழ்களின் வேட்கை சிறு துகளை ஒக்கும். அருட்பண்போடு நூல்களை ஆக்கி விளையும் எல்லையற்ற இன்பக் கடலெங்கே! அந் நீத்தத்திற் சென்று மறைந்திடும் பொருள் வேட்கைகள் என்னும் சிற்றாறுகள் எங்கே!

பொதுவாக மக்கள் எதனையும் பிறர்தரப் பெற்றுக் கொள்ளுதலை விரும்புவாராயினும், பிறர்க்கு ஈவதால் எய்தும் இன்பத்தைச் சுவைத்தவர், பெறுதலைப் பொருட்படுத்தார். ஈதலையே விரும்பிச் செய்வார். இன்னும் அக் கொடை ஊழியூழி காலமும் நின்று பிறர்க்கின்பம் பயக்குமென்று அறிந்தால் எய்தும் இன்பத்துக்கு வளவுமுண்டோ!

கச்சியப்பர் கவித்திறன்

சி. து. க.

(முன் தொடர்ச்சி)

தலைவியின் பேரழகைக் கண்டு வியந்த தலைவன் கூற்றாக,

அங்கலுழ் மேனிநல் லாள்
விழி போறல் நமக்கணியாம்
பங்கயன் மாலும் பரவும்
தணிகைப்பைம் பூஞ்சுனையில்
செங்கழு நீர்க்கு மரிதுசெவ்
வேற்கு மரிதயல்தன்
பொங்கிளஞ் சாயல் நிகர்த்தல்
பொறிமயிற் கும்மரிதே

எனத் தலைவனை முருகவேள் தலைவியின் கண்கள், இனிய சாயல் இவைகளைக் கருதும்போது, தன்னொடும் தொடர்புற்ற தணிகைவரைச் செங்கழுநீர் மலர், வேற்படை, மயில் இவைகளை நினைவு கூர்ந்ததாகக் கூறப்பட்டது.

தலைவன்பாற் காதலுற்ற தலைவியின் நிலைமையைக் காட்டும் மெய்ப்பாடுகள் பன்னிரண்டினையும் மிகத் தெளிவாகவும் அழகாகவும் கவிஞர் காட்டியிருக்கின்றார். மூன்று செய்யுட்களால் தலைவியின் நிலையை நன்கு விளக்குதல் இன்பம் தருவதாகும்.

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியோடு கலந்து மகிழ்ந்த தலைவன் கருத்தில், முதன்முதலில் தன் அரிய உயிர்க்குத் தலைவியின் உடலே உடலாகவும், தலைவியின் ஆருயிருக்குத் தன் உடலே உடலாகவும் தோன்றுகிறது. பின்னர், தங்களிடையெழுந்த அன்பின் பெருக்கினை எண்ணும்போது தன் உயிருக்குத் தலைவியின் உயிரே உயிராகவும் தலைவியின் உயிருக்குத் தன் உயிரே உயிராகவும் இருப்பதனை உணர்கின்றான். ஆகவே, தலைவன் தலைவியர் ஒருவருக்கொருவர், உயிரினும் சிறந்தவராகின்றனர். இதனை,

எனதா ருயிர்க்கும் உடலே
அவளுடல் ஈர்ங்குழலாள்
தனதா ருயிர்க்கும் உடலே
எனதுடல் சார்ந்து நின்ற
எனதா ருயிர்க்கும் உயிரே
அவளுயிர் ஏந்து கொங்கை
தனதா ருயிர்க்கும் உயிரே
எனது தனியுயிரே

என்னும் பாடலில் காணலாம்.

'மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு' என்பது பொய்யாமொழி. கல்வியை ஆயுந்தோறும் ஆயுந்தோறும் புதுப் புதுக்கருத்துக்களை உணருமாறு செய்து இன்பந் தருகின்றது; அறிவு மாய்ந்து அஞ்ஞானத்தோடு ஈடுபடும் போதெல்லாம், இறைவன் திருவடியுணர்ச்சி துணையாக நின்று துன்பத்தைப் போக்கி இன்பத்தைத் தருகின்றது. சந்தனம் தேயத் தேய மிக்க நறுமணம் வீசி இன்பந் தருகின்றது. இம் மூவகையின்பங்களும் உலகறிந்தவை. இங்ஙனமே, தலைவன் தலைவியொடு தலைப்பெய்து இன்பயரும் போதெல்லாம் இன்ப நுகர்வு மேன்மேலாக வளர்ச்சியடைந்து பெருக, இன்பத்தின் முழு நிலைமையைக் காணுகின்றான். 'சிற்றின்பம் சின்னீரது' என்று குறிப்பிடுவது வெறும் உடலின்பங்குறித்து வரும் காமத்துக்குப் பொருந்தும்.

(வரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)